**நீங்கள் என்ன செய்ய முடியும்**

1. **அறிகுறிகளை அறிந்துகொள்க.** முக்கிய அறிகுறிகளைப் பட்டியலிடும் 17 மொழிகளில் அமைந்துள்ள வசதியான வாலட் அளவுள்ள எமது சுட்டு அட்டைகளுக்கு ஆணையிடுக. உங்கள் உள்ளூர் பகுதிகளில் இந்த அட்டைகளை நீங்கள் அளிக்க முடியும். முதல் பதிலளிப்போர்க்கும் உடல்நலக் கவனிப்பாளர்களுக்குமான சுட்டு அட்டைகளையும் நாங்கள் உருவாக்கியுள்ளோம். மேலும் கற்றிந்து கொள்க: *www.dhs.gov/Bluecampaign*.

2. **உளவுகளை அறிவித்தல்.** மனிதக் கடத்தலினால் துயருறுவோர் என நீங்கள் நினைக்கும் ஒருவரை எதிர்கொண்டால், அல்லது நீங்கள் சட்ட நடைமுறையிலிருந்து உங்கள் பகுதி HSI உடன் தொடர்பு கொள்ள விரும்பினால், **HS உளவுத் தொலைபேசியில் தொடர்பு கொள்க:**

    - அழைத்திடுக **(866) 347-2423** (யு.எஸ். & கனடாவில் கட்டணமில்லாச் சேவை)
    - அழைத்திடுக **(802) 872-6199** (உலகில் எங்கிருந்தும் கட்டணச் சேவை)
    - அல்லது, உளவுகளை ஆன்லைனில் அறிவித்திடுக *www.ice.gov/tips* (இணையத்தில் எங்கிருந்தும்)

    உயர் பயிற்சி பெற்ற சட்ட நடைமுறை வல்லுநர்கள் ஒரு நாளில் 24 மணி நேரமும் வாரத்தில் 7 நாட்களும் மனிதக் கடத்தல் பற்றிய உளவுகளைப் பெறவும், விரைந்து பரப்பி நாடெங்கிலும் மற்றும் உலகம் முழுதும் உள்ள மனிதக் கடத்தல் பற்றிய புலனாய்வாளர்களுக்கு அறிவிக்கவும் உள்ளனர். ஆன் லைன் படிவம் மற்றும் இலவச உளவுத் தொலைபேசி வாயிலாக பெயர் தராமல் உளவு தெரிவிக்கலாம். **கீழ்க்கண்டவற்றைப் பெற, தேசிய மனிதக் கடத்தல் திரட்டல் வள மையத்தை (NHTRC) அழைக்கும் எண் 1-888-373-7888 :**

    - உங்கள் பகுதியிலுள்ள சேவை வழங்குநரைத் தொடர்புகொண்டு உதவி பெற;
    - நடைபெறக்கூடிய மனிதக் கடத்தல் செயல் பற்றிய தகவலை வழங்க, அல்லது
    - பயிற்சி, தொழில்நுட்ப உதவி, அல்லது தகவல் வளங்களைக் கோரிப்பெற்று மேலும் அறிந்து கொள்ள.

    NHTRC என்பது ஆண்டின் ஒவ்வொரு நாளும், வாரத்தின் 7 நாட்களும், ஒரு நாளின் 24 மணி நேரமும், நாட்டில் எங்கிருந்து அழைத்தாலும் பதிலளிக்கும் ஒரு தேசிய இலவச ஹாட்லைன் சேவை. NHTRC சட்ட நடைமுறைப்படுத்தும் அல்லது குடியேற்ற அதிகாரங்களற்ற அரசு சாரா நிறுவனத்தால் இயக்கப்படும் அமைப்பாகும்.

3. **உங்கள் பகுதியில் உள்ள தாய்நாட்டுப் பாதுகாப்புப் புலனாய்வாளர்களை (HSI) அறிந்து கொள்க.** ஒன்றிணைந்து புலனாய்வு செய்யவேண்டிய வழக்கை நீங்கள் கொண்டிருப்பதற்கு முன்பே, HSI சிறப்பு முகவர்கள் மற்றும் துயருறுவோர் உதவி வல்லுநர்கள் உங்கள் பகுதியில் மனிதக் கடத்தலில் பணிபுரிந்து அவர்களுடன் உறவை உருவாக்குகின்றனர்; அவர்களுடன் தொடர்பு கொள்ள HIS உளவு தொலைபேசியை அழைத்திடுக. ஒன்றிணைந்து பணியாற்றுவது வழக்குத் தகவல் மற்றும் நுண்ணறிவைப் பகிர்ந்து கொள்வதை நோக்கிச் செல்கிறது.

4. **உங்கள் பகுதியிலுள்ள அலுவல் படைப்பிரிவை அறிந்து கொள்க.** மனிதக் கடத்தல் அலுவல் படைப்பிரிவில் கூட்டரசு, மாநில அரசு, உள்ளூர், கவுண்டி மற்றும் பழங்குடி சட்ட நடைமுறைப்படுத்துவோர் மற்றும் வாதிகள், துயருறுவோர்க்குச் சேவை புரியும் என் ஜி ஓக்கள் ஆகியோர் இருப்பர். இந்த இணையதளத்தைப் பார்வையிட்டு உங்கள் பகுதியில் மனிதக் கடத்தல் அலுவல் படைப்பிரிவு உள்ளதா, இல்லையா என்பதை அறிந்து கொள்க *www.bja.gov*. ஒன்று இருப்பின், அவர்களுடன் உறவை ஏற்படுத்திக்கொண்டு அவர்தம் முயற்சியில் இணைக.

5. **நீங்களும் உங்கள் தோழர்களும் கற்றுக்கொள்க.** நீங்கள் எமது இலவச கணினி அடிப்படையிலான சட்ட நடைமுறைப்படுத்துபவரானால், உங்களுக்குப் பயனுள்ள வகையில் உதவி செய்ய, கலந்துரையாடல் பயிற்சிகள் மூலம் பல்வேறு நேர்காணல் மற்றும் புலனாய்வு உத்திகளை நீங்கள் பெறலாம். செல்க: *www.fletc.gov/training/programs/human-trafficking-training-program*. நீங்கள் முதல் விடையளிப்போர் அல்லது உடல்நலக் கவனிப்பு வல்லுநரானால், எமது பொது ஆன்லைன் மற்றும் கலந்துரையாடல் பயிற்சியை எடுத்துக்கொண்டு , முதல் விடையளிப்போரின் வீடியோவைக் காண்க. செல்க: *www.dhs.gov/Bluecampaign*.

6. **Blue Campaign வலைத்தளத்தைக் காண்க.** மேலும் பயிற்சி, ஏமாற்றல் பற்றிய விவரம், துயருறுவோர் உதவிக்கான விவரங்கள், மற்றும் மனிதக் கடத்தலை நிறுத்தும் போராட்டத்தில் நீங்கள் சேர்வதற்கான தகவல்கள் ஆகியவற்றிற்குக் காண்க செல்க: *www.dhs.gov/Bluecampaign*. Facebook"Like": *www.facebook.com/bluecampaign*.O அல்லது எம்மைத் தொடர்பு கொள்க: *BlueCampaign@hq.dhs.gov*.

துயருறுவோரைக் கண்டறிதல்

சட்ட நடைமுறை, முதல் விடை அளிப்போர், மற்றும் உடல்நலக் கவனிப்பாளர்கள்



# நீங்கள் என்ன செய்ய முடியும்?

*துயருறுவோரைக் கண்டறிதல் மற்றும் ஐயத்திற்கிடமான மனிதக் கடத்தலை அறிவித்தல்*

BLUE CAMPAIGN

One Voice. One Mission. End Human Trafficking.

## நீங்கள் என்ன செய்ய முடியும்?

***துயருறுவோரைக் கண்டறிதல் மற்றும் ஐயத்திற்கிடமான மனிதக் கடத்தலை அறிவித்தல்***

**துயருறுவோர் நேரடியாகக் காணப்படுகின்றனர்**

உங்கள் கடமைகளின் போது மனிதக் கடத்தலினால் துயருறுவோரை நீங்கள் எதிர்கொள்ளலாம்.மனிதக்கடத்தலினால் துயருறுவோர் நமது சமுதாயங்களில் உள்ளனர். வீட்டுத் தொந்தரவுக்கான அழைப்புகளின்போது சட்ட நடவடிக்கையானது துயருறுவோரை எதிர்கொள்ளலாம்; மசாஜ் நிலையங்கள், மதுக்கூடங்கள், மற்றும் நிர்வாண நிலையங்கள்; அல்லது வழக்கமான போக்குவரத்து நிறுத்துமிடங்களிலும் கூட துயருறுவோரை எதிர்கொள்ளலாம்.முதல் பதிலளிப்போர் மற்றும் உடல்நலக் கவனிப்பு வல்லுநர்கள் அவசர நிலைகளில் பதில் தரும்போது அல்லது மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும்போது அல்லது மருத்துவர் அலுவலகங்களில் இந்த அறிகுறிகளைக் காணலாம். உடல்நலம் மற்றும் பாதுகாப்புக் கண்காணிப்பாளர்கள் ஆகியோர் உணவு விடுதிகளில், தொழிற்கூடங்களில், கட்டிடம் கட்டுமிடங்களில் அல்லது பண்ணைகளில் துயருறுவோர் வேலை செய்துகொண்டிருப்பதைக் காணலாம்.

**கடத்தலினால் துன்புறுவோர், யு.எஸ்.குடிமக்கள் உட்பட அவர்களின் வயது, இனம், பாலினம், தேசிய இனம் ஆகியவை எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம்**

இடம் பெயர்வதற்கான சட்ட நிலைமையை அவர்கள் பெற்றோ அல்லது பெறாமலோ இருக்கலாம். துயருறுவோர் முறையான அல்லது முறையற்ற தொழிற்பகுதிகளில் காணப்படுகின்றனர்; சிலர் நல்ல ஊதியம் அல்லது காதல் போன்ற பொய் வாக்குறுதிகளால் ஈர்க்கப்பட்டிருப்பர். அடிக்கடி, அவர்கள் வீட்டுப் பணி, பண்ணை அல்லது தொழிற்கூடப் பணிகள் அல்லது பாலியல் வாணிகம் (விபச்சாரம்) செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். கூட்டாட்சி சட்டப்படி, பாலியல் வாணிகத்தில் ஈடுபடுத்தப்படும் ஒவ்வொரு இளையவரும் மனிதக்கடத்தலின் துயருறுவோராவார்.

**கடத்தல்காரர்கள் எவ்வாறு செயல்படுகின்றனர்**

கடத்தல்காரர்கள் சமூகப் பாதுகாப்பு குறைந்த அல்லது இல்லாதவர்களை இரையாக்குகின்றனர். பொருளாதாரத் துன்பம், வீட்டில் வன்முறை, இயற்கைப் பேரிடர்கள், அல்லது அரசியல் நிலைத்தன்மை இன்மை உட்பட பல காரணங்களால் துன்புறுவோரை அவர்கள் எதிர்பார்க்கின்றனர். வன்முறை அல்லது வன்முறை மிரட்டல்கள் மட்டுமின்றி உளவியல் முறையிலும் பலவந்தப்படுத்தி பல உத்திகளைப் பயன்படுத்திக் கடத்தல்காரர்கள் துயருறுவோரைச் சிக்க வைக்கின்றனர். தாங்கள் அடிமைப்படுத்தப்படுகிறோம், அல்லது உயர்ந்த பொது அமைப்புகளிடம் உதவி கேட்க வேண்டும் என்பதைக்கூட உணர முடியாத அளவுக்கு இந்த உணர்வதிர்ச்சி மிகப் பெரிதாக அமைந்துவிடுகிறது.

**மனிதக் கடத்தலின் அறிகுறிகள்**

முக்கியச் சுட்டுதல்களை உணர்ந்துகொள்ளுதல் மூலமாக ஓர் உயிரைக் காப்பாற்ற முடியும். துயருறுவோரைக் கண்டறிவதில் இதுவே முதற்படி. ஒவ்வொரு மனிதக் கடத்தல் நிலைமையிலும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள எல்லா சுட்டுதல்களும் இருக்கும் என்பதில்லை. ஏதேனும் சுட்டுதல் இருப்பது அல்லது இல்லாமலிருப்பது மனிதக் கடத்தலின் அவசியமான நிரூபணமாக இருக்கத் தேவையில்லை.

நீங்கள் ஒரு சட்ட நடவடிக்கையாளராக இருந்தால், ஒரு புலனாய்வில் கூட்டாகப் பணியாற்ற அல்லது ஒரு உளவை அறிவிக்க உங்கள் பகுதியிலுள்ள தாய்நாட்டுப் பாதுகாப்பு புலனாய்வுகள் (HSI) கள அலுவலகத்துக்கு அல்லது மனிதக் கடத்தல் அலுவல் படைப்பிரிவிடம் தயவு செய்து செல்லவும். மனிதக் கடத்தலைப் புலனாய்வு செய்வதும் கடத்தல்காரகளைக் கைது செய்வதும் HSIஇன் பொறுப்பாகும். உங்கள் மேலாளருக்கு அறிவிக்கவும் சரியான உள்ளூர் அதிகாரிகளிடம் தெரிவிக்கவும், நீங்கள் பின்பற்ற வேண்டிய, நிறுவனத்திற்கே உரிய சிறப்பு நடைமுறை இருக்கலாம். நீங்கள் முதல் பதிலளிப்பவராக இருப்பின், தயவு செய்து ஓர் உளவை அறிவிக்கவும். உங்கள் பாதுகாப்பும் துயருறுவோரின் பாதுகாப்பும் மிகவும் முக்கியம்.**நீங்கள் சட்ட நடவடிக்கையாளராக இருந்தாலொழிய, ஐயத்திற்கிடமான கடத்தல்காரருடன் எந்த நேரத்திலும் நேரடியாக மோதுவதற்கு முயலாதீர் அல்லது துயருறுவோரை உங்கள் ஐயத்தைப் பற்றிக்கூறி எச்சரிக்காதீர்.**

உழைப்பு அல்லது சேவைச் சுட்டுதல்கள்

- மனிதர் ஒரு நோக்கத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டு வேறு சில பணிகளில் கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்டாரா?
- அவரின் ஊதியம் கடனைத் தீர்ப்பதெற்கென்று முடக்கப்படுகிறதா?
- அவர் பாலியல் செயல்களுக்காக கட்டாயப்படுத்தப்பட்டாரா? அவர் பாலியல் வாணிகத்தில் ஈடுபடும் இளைஞரா?
- அவர் மிக அதிகமாக நீண்ட நேரம் மற்றும்/அல்லது அசாதாரண நேரங்களில் பணியாற்றுகிறாரா?
- அவர் நிலைமைக்கேற்ற அல்லது பணிக்கேற்றவாறு இல்லாமல் அரைகுறை ஆடை அணிந்துள்ளாரா?

கட்டுப்பாட்டுச் சுட்டுதல்கள்

- மனிதர் அடையாள மற்றும் பயண ஆவணங்களை தன் உடைமையில் வைத்துள்ளாரா, இல்லை எனில், ஆவணங்கள் யார் கட்டுப்பாட்டில் உள்ளன?
- மனிதர் என்ன கூற வேண்டும் என யாரேனும் கற்பிப்பது போல் தோன்றுகிறதா? நிலைமையை யாரேனும் கட்டுப்படுத்துவது போல் தோன்றுகிறதா?
- மனிதர் அல்லது அவர்களது குடும்பத்தவருக்கு ஊறு விளைவிப்பதாக மிரட்டப்பட்டதா?
- மனிதர் அச்சம், கோழைத்தனம், மிகவும் பணிவு ஆகியவற்றுடன் இருக்கிறாரா?
- வெளியேற்றம் அல்லது சட்டச் செயல்பாட்டு நடவடிக்கையால் மனிதர் மிரட்டப்பட்டாரா?
- மனிதர் குழப்பம், அச்சம் அல்லது மனநோய் அல்லது உடல்வன்முறை அறிகுறிகளுடன் இருக்கிறாரா?
- மனிதரால் நண்பர்களையும் குடும்பத்தவரையும் சுதந்திரமாக தொடர்பு கொள்ள முடிகிறதா?
- மனிதர் சுதந்திரமாகப் பழகவும் அல்லது சமய வழிபாடுகளில் கலந்து கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறாரா?

வாழும் நிலைமைகளுக்கான சுட்டுதல்கள்

- மனிதர் தனக்கென உடைமைகள் இல்லாமல், நிலையற்ற வாழ்க்கை நிலைமைகளில் இருப்பது போல் தோன்றுகிறதா?
- மனிதருக்கு ஓடியாடும் உரிமை உள்ளதா? அவர் வாழுமிடத்திலிருந்து உரிமையுடன் வெளியேற முடிகிறதா? காரணமற்ற பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் உள்ளனவா?
- உணவு, நீர், உறக்கம், மருத்துவக் கவனிப்பு அல்லது பிற வாழ்க்கைத் தேவைகள் மனிதருக்கு மறுக்கப்பட்டனவா?

பயணச்சுட்டுதல்கள்

- அவருக்கு தம் இறுதி இருப்பிடம் பற்றி தெரிகிறதா? அல்லது, அவர்கள் அங்கு எப்படிச் செல்வார்கள்?
- அந்த இறுதி இருப்பிடத்தில் யார் சந்திப்பார் என்பது மனிதருக்குத் தெரியுமா?
- உண்மையான பெற்றோர் அல்லது பாதுகாவலர் எனத் தோன்றாத ஒருவருடன் சிறுவர் பயணம் செய்கிறாரா?

மருத்துவச் சுட்டுதல்கள்

- மனிதருக்குத் தழும்புகள், தீக்காயங்கள், உறுப்புக் குறைபாடுகள் அல்லது தொற்றுகள் உள்ளனவா?
- மருத்துவ வரலாற்றை அளிப்பதில் மனிதர் தடுக்கப்படுகிறாரா அல்லது வரம்புக்கு உடபடுத்தப்படுகிறாரா?
- சிறுநீர் கழிப்பதில் தொந்தரவுகள், இடுப்பு வலி, கருவுற்றிருத்தல் அல்லது குடல் நோய் ஆகியவற்றால் அவர் துன்புறுகிறாரா?
- மனிதர் நாட்பட்ட முதுகு வலி, கேட்டல் குறைபாடு, இதயக் குருதி நாள நோய், அல்லது மூச்சு விடுதல் போன்ற தொந்தரவுகளை அனுபவிக்கிறாரா?
- மனிதருக்குக் குறைவான கண்பார்வை அல்லது கண் பிரச்சினைகள் உள்ளனவா?
- மனிதருக்கு ஊட்டச் சத்துக் குறைவு அல்லது தீவிர பல் பிரச்சினைகள் இருப்பது போல் தோன்றுகிறதா?

BLUE CAMPAIGN
One Voice. One Mission. End Human Trafficking.™